# காண வேண்டும்.



அண்ணன் பலராமனுடன் சேர்ந்து ஆயர்பாடியில்,

கண்ணன் செய்த லீலைகளை நான் காணவேண்டும் !

அண்ணன்........

வெண்ணை, தயிர் திருடித்தாம் தின்றதில்லாமல்,

குரங்கு, கிளிகளுக்கும்அவற்றை கொடுத்து பின்னர் ;

கண்ணைமூடி படுக்கையில், அன்னை காணும்போது,

உறங்குவது போன்று நடிப்பதைக் காணவேண்டும் !

அண்ணன்........

சட்டியில் தயிர், பாலை ஆயர்பெண்கள் எடுத்துசென்று,

விற்பதனைக் கண்ட அவர்கள், அதன்மீது கல்லெரிந்து ;

தட்டியுடைக்க, பெண்கள் உடலில் அவை வழிந்தோட,

நிற்பதனை நான் ஆசையோடு கண்குளிர காணவேண்டும் !

அண்ணன்...........